LIBRARY
21 JUL 2004
Eastern University Sri Lanka

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதல் கலைமாணித் தேர்வு 1999/2000 (வெளிவாரி)
(டிசெம்பர்-2003/ஜனவரி-2004)

**FA 101** நுண்கலைக்கு ஓர் அறிமுகம்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

ஒவ்வொரு பகுதியிலுமிருந்தும் இரண்டு வினாக்களையேனும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

## பகுதி –I

01. நுண்கலைகள் என்று எவற்றைக் கருதுகிறீர்? அதற்கான காரணங்கள் யாவை?

02. கலை என்பது யாது? கைவினை என்பது யாது? இரண்டினுக்குமிடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளை விளக்குக.

03. இந்தியக் கலைகளிற் காணப்படும் தனித்துவங்கள் என்று எவற்றைக் கருதுகிறீர்? ஏதாவது ஒரு இந்தியக் கலையை ஆதாரமாகக் கொண்டு உமது பதிலைத் தருக.

04. கலை ரஸனைக்கும் கலை விமர்சனத்திற்குமிடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?

05. எவையேனும் மூன்றினுக்குச் சிறுகுறிப்பெழுதுக.

    1. சடங்குக் கலைகள்
    2. அவைக்காற்றுக் கலைகள்
    3. தொழினுட்பக் கலைகள்
    4. அழகும், அழகியலும்
    5. கலையும் வடிவமும்

## பகுதி - II

06. அரங்காவது யாது என விளக்கி அரங்கின் தோற்றம் பற்றிய கோட்பாடுகளைச் சுருக்கமாகத் தருக.

07. ஓவியக் கலையினின்று அரங்கக் கலை எவ்வகையில் வேறுபடுகிறது என்பதை விளக்குக.

08. மேற்கத்தைய அரங்கிற்கும் கீழைத்தேய அரங்கிற்குமிடையேயுள்ள பிரதான வேறுபாடுகள் யாவை?

09. இலங்கையில் தமிழ் அரங்கு அல்லது சிங்கள அரங்கு வளர்ச்சி பெற்ற வகையினைப் படி முறைப்படி விளக்குக.

10. நீர் பார்த்த நாடகம் ஒன்றினை அரங்கவியற் கோட்பாடுகளுக்கியைய விமர்சனம் செய்க.